2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டுப்புழு விதை (உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2–15

(ஒ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2023), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2023)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். ஓரிரு வார்த்தைகளில் பேசி முடியுங்கள். எல்லோருக்கும் சேர்த்தே பேசுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தை வரவேற்கின்ற அதேநேரத்தில், தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற சரக்குந்து ஓட்டுநர்கள் மற்றும் அதனுடைய உரிமையாளர்கள் சுங்கச்சாவடிகளுடைய மிகப்பெரிய கட்டண விதிப்பால் மிகுந்த துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆளாக்கப்படுகிறார்கள். ஒன்றிய அரசுடன், மாநில அரசு பேசி "தேவையான ஆண்டு கட்டணத்தை மொத்தமாக நாங்கள் கட்டிவிடுகிறோம். எங்கள் வண்டி, வாகனங்களை சுங்கச்சாவடிகளில் நிறுத்த வேண்டாம்" என்ற ஒரு வேண்டுகோளை வைத்து, பல்வேறுவிதமான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழலில் நாம் சரக்குக் கட்டண வரிகளை உயர்த்துகின்றபோது, சுங்கச்சாவடியும் ஆண்டுக்கு இரண்டு முறை கட்டண வரியை உயர்த்துகின்றது. இதனால் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாவது அப்பாவி பொதுமக்கள்தான். விவசாயிகளுடைய விளைபொருட்களிலிருந்து ஏனைய அனைத்துப் பொருட்களின் விலைவாசிகளும் ஏறிக்கொண்டே வருகின்றன. ஆதலால், இந்தியாவிலுள்ள நான்கில் ஒரு பங்கு சுங்கச்சாவடிகளை நடத்துகின்ற நிறுவனத்திடத்தில்—நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட, நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, சென்னை மாநகரத்திற்குள் இயங்கக்கூடாத, சட்டத்திற்குப் புறம்பாக இயங்கிவந்த மூன்று சுங்கச்சாவடிகளை மூடி இருக்கின்றீர்கள். தற்போது ஓமலூர், புழல் உள்ளிட்ட. . .

@ 11-10-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும்.

திரு. தி. வேல்முருகன்: ஒரே நிமிடம். மிக முக்கியமான விஷயம். மிகச் சுருக்கமாக முடித்துவிடுகிறேன். போரூர் உள்ளிட்ட சட்டத்திற்குப் புறம்பான சுங்கச்சாவடிகள் மூலமாக வசூலிக்கப்படும் கட்டணத்தால், மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. விலைவாசி உயர்வும், ஏற்படுகின்ற காரணத்தினால், மேலும், மேலும் நீங்கள் இந்த வரியை விதிப்பதற்குப் பதிலாக சம்பந்தப்பட்டவர்களிடத்திலும் கலந்துபேச வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளோடு, இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள். Content-ஐ மட்டும் சொல்லுங்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் சில பொருள் வரையறை சேர்க்கப்பட்டிருப்பதும், குறிப்பாக பசுமை வரியில் இன்றைய கால சூழலுக்கேற்ப e-vehicles exemption சேர்க்கப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கது. ஆனால், குறைந்த எடை கொண்டு செல்லக்கூடிய சரக்கு வாகனங்கள், 5.5 ton-க்கு உள்ளாக இருக்கக்கூடிய வாகனங்களுக்கான வரி விகிதம் ஏற்றப்பட்டிருப்பது கிட்டத்தட்ட 100 சதவீதமாக இருக்கிறது. அதைவிட பெரிய வாகனங்களுக்கான வரி விகிதம் குறைவாக இருக்கிறது. இந்த அடிப்படையில், மிகவும் ஏழை எளியவர்கள் பயன்படுத்தக்கூடிய சிறிய வாகனங்களுக்கு கட்டண வரிவிதிப்பு அதிகமாக இருக்கிறது. இதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுங்கச்சாவடி கட்டணம் குறித்து, நம்முடைய மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் முன்மொழிந்த கருத்துகளை நானும் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டண உயர்வால் கடுமையான பாதிப்பு

ஏற்படும், விலைவாசி உயர்வதற்குக்கூட வாய்ப்பாக அமையும் என்ற காரணத்தினாலே, அரசு இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்மீது சுமை ஏற்படாமல் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே, ஆரம்ப நிலையிலேயே இச்சட்டமுன்வடிவை நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–20

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

16. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தம் இல்லாத ஒரு தீர்மானத்தை வருத்தத்துடன் படிக்கிறேன்.*